

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | பிப்ரவரி 13, 2020 | புரட்சி 19 | முழக்கம் 05 | விலை: ரூ.3.00


# அம்பேத்கரின் ஜாதி ஒழிப்பு முழக்கத்தோடு கோவையில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் அணி வகுத்த மாட்சி





பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் சார்பாக கோவையில் கடந்த 9.2.2020 அன்று நீலச் சட்டை பேரணி ஜாதி ஒழிப்பு மாநாடு நடைபெற்றது.

காவல்துறை அனுமதி மறுப்பின் காரணமாக இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்ட இந்த நிகழ்வு பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்புத் தோழர்களின் இடையறாத முயற்சியால் நீதிமன்றத்தின் மூலமாக அனுமதி பெறப்பட்டு பேரணியும் மாநாடும் திட்டமிட்டபடி நடந்துள்ளது.

இந்தப் பேரணியும் மாநாடும் பொதுமக்களின் பார்வையை ஈர்த்து விடக்கூடாது என்று அரசும் காவல் துறையும் பேரணி துவங்கும் போதும் மாநாடு நடைபெறும் பொழுதும் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்திய வண்ணமே இருந்தார்கள்.

பேரணி நடைபெறும் 9.2.2020 முந்தைய நாள் மதியம் திடீரென காவல்துறை ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்த பேரணி செல்லும் பாதைக்கு அனுமதி மறுத்து குறுகலான சாலையில் பொதுமக்களின் பார்வை படாத இடத்தில் ஊர்வலப் பாதையை மாற்றி அமைத்தது.

கோவையில் அனைத்து இயக்கங்களும் கட்சிகளும் பொதுக் கூட்டங்கள் நடத்தும்

வ.உ.சி. பூங்கா மைதானத்தில ஜாதி ஒழிப்பு மாநாட்டை நடத்துவதற்கு முதலில் அனுமதி அளித்த காவல்துறை திடீரென அந்த அனுமதியை ரத்து செய்துவிட்டு குறுகலான பாலசுந்தரம் சாலையில் மக்கள் பார்வை படாதபடி மாநாடு நடத்த இடத்தை மாற்றி அமைத்தது.

இவ்வளவு தடைகளுக்கும் பிறகும் இவற்றை யெல்லாம் முறியடிக்கும் வகையில் அனைவரையும் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் பேரணி மிக சிறப்பாக நடந்தது. ஆயிரக்கணக்கானோர் நீலச் சட்டையில் ஜாதி ஒழிப்பு முழக்கங்களோடு அணி வகுத்து வந்தனர். பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பில் பங்கு பெற்றிருக்கக் கூடிய அனைத்து அமைப்புகளின் தோழர்களும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உற்சாகமாக பேரணியில் பங்கேற்றனர்.திருச்சியில் நடைபெற்ற கருஞ்சட்டை பேரணி போல பெரும் திரளான எழுச்சியான பேரணியை நடத்திக் காட்ட வேண்டும் என்கிற முனைப்போடு செயல்பட்ட கூட்டமைப்பின் தோழர்களின் உழைப்பிற்கு பெரும் வெற்றி கிட்டியுள்ளது.திருச்சி கருஞ்சட்டை பேரணி தமிழக மக்களின் கவனத்தை ஈர்த்தது போலவே கோவை நீலச்சட்டை பேரணியும் பெருமளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

காவி பார்ப்பன பயங்கரவாத அரசு சமூக நீதிக்கும் மதச் சார்பற்ற தன்மைக்கும் பேராபத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில் கோவையில் பெரும் திரளாகவும் எழுச்சியுடனும் நடைபெற்ற இந்த நீலச்சட்டை பேரணி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பேரணி யாக அரசியல் நோக்கர்களால் கருதப்படு கிறது

பிற்பகல் 3 மணி அளவில் கோவை அவிநாசி சாலை அண்ணா சிலை அருகில் இருந்து புறப்பட்ட பேரணி காவல்துறை திட்டமிட்டு உருவாக்கிய பல்வேறு குழப்பங்களையும் முறியடித்து பல்லாயிரக் கணக்கான தோழர்கள் சீராகவும் ஒற்றுமையுடனும் இப்பேரணியில் கட்டுப்பாட்டுடனும் கலந்து கொண்டனர்.

பேரணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்கொளத்தூர் மணி தலைமை தாங்கினார் ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் அதியமான் பேரணியைத் துவக்கி வைத்தார். அந்தப் பகுதியே நீல வண்ணம் பாய்ச்சியது போன்று பார்க்கும் இடமெல்லாம் நீல நிறமே நிறைந்திருந்தது.




பறை இசை சிலம்பம் ஆகியவற்றோடு உற்சாக மாய் நடைபெற்ற இப்பேரணியில் புரட்சியாளர் அம்பேத்கர், பெரியார் கருத்துக்கள் முழக்கமிடப் பட்டன.

சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இப்பேரணி முடிவில் மகளிர் பாலிடெக்னிக் அருகில் உள்ள பாலசுந்தரம் சாலையில் அமைக்கப்பட்டிருந்த ஜாதி ஒழிப்பு மாநாட்டு மேடைக்கு வந்தடைந்தது.

ஆறு மணி அளவில் ஜாதி ஒழிப்பு மாநாடு துவங்கியது. மாநாட்டிற்கு தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார்.

திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமா வளவன், பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு ஒருங்கிணப்பாளர் பொழிலன், தமிழர் வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன், மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன், காந்தி கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் தனியரசு, ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் அதியமான் தமிழ் புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன் விடுதலை தமிழ் புலிகள் தலைவர் குடந்தை அரசன், SDPI தெஹலான் பாகவி, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜிவாஹிருல்லா உள்ளிட்ட கூட்டமைப்பின் தலைவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே காவல் துறை அப்பகுதிகளில் இருக்கும் தேநீர்க் கடைகள், உணவகங்கள், மருந்துக் கடைகள் ஆகியவற்றை மூடச் செய்து மாநாட்டில் கலந்து கொண்ட தோழர்களுக்கு ஏதும் கிடைத்துவிடாமல் செய்தனர். ஆனாலும் மாநாடு மிகச் சிறப்பாக கட்டுப்பாடுடன் நடைபெற்றது.

மிகுந்த எழுச்சியுடனும் பெரும் திரளாகவும் தோழர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் 31 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டின் நிறைவில் போராட்ட அறிவிப்பு செய்யப்பட்டது.

வர்ணபேதத்தை கற்பித்து பிறப்பின் அடிப்படையில் உள்ள ஜாதிய ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்தி நிலைபெறச் செய்ய அடிப்படை ஆதாரமாக இருக்கக்கூடிய மனு சாஸ்திரத்தை எரிக்கும் போராட்டம் வரும் 2020, மே 20ஆம் தேதி புதன்கிழமை பண்டிதர் அயோத்திதாசர் பிறந்த நாளன்று பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெறும் என்று மாநாட்டின் நிறைவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியல் இனப் பிரிவினர், இஸ்லாமியர், பிற்படுத்தப்பட்டோர், முற்போக்கு சிந்தனை யாளர்கள் என அனைவரும் நீலச் சட்டை அம்பேத்கர் படத்துடன் ‘ஜாதி ஒழிப்பு’ எனும் சமூக விடுதலைப் போருக்கு ஆயத்தமாகிவிட்டதை தமிழகத்துக்கு அறிவித்தது இந்தப் பேரணி. அம்பேத்கர், பெரியாரை எதிர் எதிர் துருவங்களாக நிறுத்தி பிரித்தாலும் சூழ்ச்சி, கபட நாடகங்கள் தமிழ்நாட்டில் வெற்றி பெறாது என்பதையும் இப்பேரணி உணர்த்தியது.

**செய்தி : பரிமள ராஜன்**
**(கழக முகநூல் பிரிவு பொறுப்பாளர்)**

## அயோத்திதாசர் பிறந்த நாளான மே 20இல் மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம்

# கோவை நீலச்சட்டைப் பேரணி மாநாட்டுத் தீர்மானங்கள்

# ஜாதி மறுப்பு திருமணப் பாதுகாப்பு ஆணையம் அமைத்திடுக!

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில் திருவள்ளுவராண்டு 2051 (9.2.2020) - அன்று வ.உ.சி. திடலில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

**வீரவணக்கத் தீர்மானங்கள் :** *1. சாதிக் கொடுமைகளை எதிர்த்தும், சாதி ஆதிக்கத்தை ஒழிக்கும் நோக்கத்தோடும் களமாடிய வலியுறுத்திக் கருத்துப்போர் நிகழ்த்திய திருவள்ளுவர், ஔவையார் தொடங்கி எண்ணற்ற தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், கருத்தாளர்கள் மற்றும் 1957ஆம் ஆண்டு சாதி ஒழிப்புக்காக சாதியைப் பாதுகாக்கின்ற சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்திச் சிறை சென்றதோடு மட்டுமின்றி, அப்போராட்டக் காலச் சூழலில் ஈகியர்களான எண்ணற்ற தோழர்கள் உள்ளிட்ட 20ஆம் நூற்றாண்டின் சாதி ஒழிப்புப் போராளியர்களாக முனைந்து எழுந்த அறிஞர்கள், இயக்கச் செயற் பாட்டாளர்கள், களப் போராளியர்கள், முன்னின்ற பொதுமக்கள் என அனைவருக்கும் மற்றும் அண்மையில் மேட்டுப்பாளையத்தில் தீண்டாமைச் சுவர் இடிந்து விழுந்த நிலையில் மறைவுற்ற பதினேழு ஏதுமறியா மக்களுக்கும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வீரவணக்கம் செலுத்துகிறது.*

*2. தமிழ்நாட்டிற்கு வெளியே பார்ப்பனிய சாதிய வெறி களுக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த அறிஞர்கள் எழுத்தாளர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான போராளி யர், வெகு மக்கள் என அனைவருக்கும் இம்மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது.*

*3. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகத் தன்னுயிர் ஈந்த எண்ணற்ற போராளிகளுக்கும் ஈகம் செய்திருக்கின்ற தமிழீழ மக்களுக்கும் ஆதரவு தெரிவித்து உயிரை ஈந்த தமிழ்நாட்டுத் தமிழர்கள் அப்துல் ரஹூப், முத்துக்குமார், செங்கொடி உள்ளிட்ட அனைவருக்கும் இம்மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது.*

**கொள்கைத் தீர்மானங்கள்:** *4. சாதிவெறி மத வெறியைத் தூண்டி மக்களிடையே ஒரு பக்கம் பகை உணர்வுகளை உருவாக்கிக் கொண்டிருப்பதோடு ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை அடையாளம் என்கிற வகையில் பார்ப்பனிய அதிகார வெறி கொண்டு இயங்குகிற இந்திய அரசு, இந்தியா விற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசங்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அடையாளங்களையும் மறுக்கிறது. தமிழ் ஈழ ஏதிலியர் களுக்குக் குடியுரிமை வழங்க மறுப்பதோடு, மதச் சிறுபான்மை மக்களுக்கும் குடியுரிமை வழங்க மறுத்து இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றுகிற முயற்சி செய்கிற நோக்கில் உள்ள இந்திய அரசை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்நிலையில் மக்கள் தங்கள் இன அடையாள உரிமைகளையும், மொழித் தேச அளவில் தங்களைத் தமிழர்கள் என்றே பதிந்து கொள்ளவும், தமிழக மக்களைக் குடியுரிமையோடு இங்கு வாழ வைக்கவும், மதச் சிறுபான்மை யினருக்கு எவ்வகை இடர்களும் ஏற்படாத வகையில் குடியுரிமை வழங்கவும் இம் மாநாடு வலியுறுத்து கிறது.*

*5. தமிழகத்தில், சாதி ஆணவப் படுகொலைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே வருகின்றன. சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்குச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என உச்சநீதிமன்றமே வலியுறுத்தி உள்ளது. தவிரவும் இந்தியச் சட்ட ஆணையம் மற்றும் இந்திய மகளிர் ஆணையம் ஆகியவையும் சாதி ஆணவப் படுகொலைக்கு எதிராகத் தனிச்சட்டம் இயற்ற வேண்டும் எனப் பரிந்துரைத் துள்ளன. இந்நிலையில் சாதி ஆணவப் படுகொலைகள் குறித்து இதுவரையில் தமிழக அரசு ஏதும் கருத்தறி விக்காமல் இருப்பது சரியன்று. எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டும், நடப்பு நிலையைக் கருத்தில் கொண்டும் சாதி ஆணவப் படு கொலையைத் தடுக்கச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்றும், சாதிமறுப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தவும், சாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவைக்கவும், சாதி மறுப்புத் தம்பதிகளுக்குச் சட்ட, சமூகப்பாதுகாப்பு வழங்கவும் அவர்களின் வாரிசுகளைச் சாதியற்றவர்களாகப் பதிவு செய்து அவர்களுக்குச் சிறப்புரிமை வழங்கவும் சாதி மறுப்புத் திருமணப் பாதுகாப்பு ஆணையம் என்கிற பெயரில், ஒரு தனி ஆணையம் அமைத்திட வேண்டும் எனவும் தமிழ்நாடு மற்றும் இந்திய அரசுகளை இம் மாநாடு வலியுறுத்துகிறது.*

*6. சாதி ஆணவப் படுகொலைகள் நடந்தால், அதற்கு மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் பொறுப்பு ஏற்க வேண்டும் என நீதிமன்றங்கள் வலியுறுத்தி உள்ளன. எனவே சாதி ஆணவப் படுகொலைகள் அதிகமாக நடக்கும் மாவட்டங் களில் அம் மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மாநாடு கோருகிறது.*

*7. சாதி, மத மறுப்புத் திருமணம் செய்யும் இணையருக்குக் குறிப்பிட்ட காலம்வரை பாதுகாப்பு வழங்கப் பாதுகாப்பு இல்லங்களைப் பஞ்சாப் அரசு நிறுவி உள்ளது. அதைப் போன்ற பாதுகாப்பு இல்லங்களைத் தமிழக அரசு உருவாக்க வேண்டும் என இம்மாநாடு பரிந்துரைக்கிறது.*

*8. சாதி, மத மறுப்புத் திருமணம் செய்துகொண்ட இணையர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக அறிவிக்க வேண்டும். மேலும் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், காவல் உயரதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் பங்கேற்கும் அரசு விழாக்களில் அவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்க அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும் என்றும், சாதிமறுப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தவும், நெருங்கிய இரத்த உறவுத் திருமணங்கள் செய்வதைத் தவிர்க்கப் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக நெருங்கிய இரத்த உறவுத் திருமணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் மூளை மற்றும் உடலியல் குறை பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவியல் அடிப்படையிலான விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

*9. தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டம் 2009, அனைத்துத் திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்து கிறது. மேலும் திருமணம் நடந்த இடத்தில்தான் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற சலுகையையும் அது வழங்கி உள்ளது. அச்சட்டப்படி சாதி குறித்து எதுவும் கேட்கப்படுவ தில்லை. ஆனால் தற்பொழுது அச் சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்ய இருப்பவர்களின் மதம் பற்றிக் கேட்கப்படுகிறது. சாதி / மதம் குறித்து எவரும் தெரிவிக்க வேண்டியதில்லை என 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டத்தில் மதம் பற்றிக் கேட்கக் கூடாது என்ப தோடு, எந்தவகைக் கால வரையறையும் இருக்கக்கூடாது என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.*

*10. சாதி மறுப்புத் திருமணம் செய்யும் இணை யருக்குச் சிறுதொழில் நடத்த வட்டியில்லாக் கடன், தொழில் நடத்த அனுமதி வழங்குவதில் முன்னுரிமை, இலவச வீட்டுமனைப் பட்டா, வேலை வாய்ப்பில் தனி இடஒதுக்கீடு போன்றவை அனைத்துப் பிரிவு சாதி யினருக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும், சாதி மறுப்புத் திருமணம் செய்த இணையரின் குழந்தை களுக்கு அனைத்து நிலைகளிலும் கட்டணமில்லாக் கல்வியும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சிறப்பு இடஒதுக்கீடும் வழங்க வேண்டும் எனவும் இம் மாநாடு வேண்டுகிறது.*

*11. சாதி மறுப்புத் திருமண இணையருக்கு இராஜஸ்தான் அரசு ரூ.5 இலட்சம் உதவித் தொகை வழங்குகிறது. பல மாநிலங்கள் குறைந்தது ஒரு இலட்சம் ரூபாய்வரை உதவித் தொகை வழங்குகின்றன. ஆனால் இந்தியாவிலேயே மிகக் குறைந்த உதவித் தொகையைத் தான் தமிழக அரசு வழங்கி வருகிறது. அதிலும் பட்டம் பெற்ற பெண்களுக்கு அதிக உதவித் தொகையும், பட்டம் பெறாத பெண்களுக்குக் குறைவான உதவித் தொகையும் வழங்குகிறது. எனவே இந்தப் பாகு பாட்டைக் களைந்து, சாதிமறுப்பு இணையருக்கு இராஜஸ்தான் அரசு வழங்கு வதுபோல் ஐந்து இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டும் என இம்மாநாடு வேண்டுகிறது.*

*12. சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட இணையரின் குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சிறப்பு இடங்களைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. ஆனால் 69 விழுக்காட் டிற்குமேல் இந்த இட ஒதுக்கீடு வருவதால், அதை வழங்கக் கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இதை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆனால் அந்த வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. சாதி மறுப்புத் திருமண இணையரின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகையைப் பறிக்கும் இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் விரைவுபடுத்தி நீதியை மீட்டுத் தருமாறு இம் மாநாடு தமிழக அரசைக் கோருகிறது.*

*13. பட்டியலினத்தவர் மீதான வன்கொடுமைகள் குறித்துத் தொடர்ந்து மீளாய்வுகள் நடத்தப்பட வேண்டும் எனும் சட்டப் பொறுப்பு இருந்தாலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அப்படிப்பட்ட கூட்டங்கள் நடைபெறுவதில்லை. எனவே இப்படிப் பட்ட மீளாய்வுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனவும், அவற்றின்மீது எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் குறித்த அறிக்கைகள் பொதுவெளியில் பகிரப்பட வேண்டும் எனவும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.*

*14. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள காவல் நிலையங் களில், அதே சாதியைச் சார்ந்தவர்களை அந்தக் காவல் நிலையத்தில் உயர் அதிகாரிகளாக எக்காரணம் கொண் டும் நியமிக்கக் கூடாது என இம்மாநாடு வற்புறுத்துகிறது.*

*15. கல்வி நிலையங்களில் சாதியை வெளிப்படுத்தும் படி வண்ணக் கயிறுகளை அக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கட்டி வரக்கூடாது என்ற தெளிவான ஆணையை வெளியிட வேண்டும் என இம் மாநாடு தமிழக அரசைக் கோருகிறது.*

*16. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கான பள்ளிகளில், போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் எனவும், அப் பகுதியிலுள்ள கல்வி நிலையங்களின் அடிப்படைக் கட்டமைப்பை விரைந்து மேம்படுத்த வேண்டும் எனவும் தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.*

*17. கல்விநிலையங்களின் பெயர்களில் உள்ள சாதிப் பெயரை நீக்க வேண்டும் எனவும், தீண்டாமை மற்றும் சாதி ஒழிப்பு குறித்த செய்திகளைப் பாடத் திட்டத்தில் இணைக்க வேண்டும் எனவும் இம்மாநாடு வலியுறுத்து கிறது.*

*18. அனைத்துப் பட்டியல்சாதி, பழங்குடியர்களின் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட சாதியர்களின் வீடு, நிலமற்றக் குழந்தைகளுக்கு ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலான கல்வி உதவித்தொகைத் திட்டத்தை அறிவிக்க வேண்டும்.*

*19. நிலமற்ற பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக 1892 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்-இந்திய அரசால் பஞ்சமி நிலம் என்ற பெயரில் விவசாய நிலம் வழங்கப்பட்டது.*

*தற்போது அந்த நிலத்தின் பெரும்பகுதி வசதி படைத்த பட்டியல் மற்றும் பழங்குடிகள் அல்லாதவர்கள் அரசியல் மற்றும் சாதி செல்வாக்கைப் பயன்படுத்தி பஞ்சமி நிலத்தை அபகரித்துக் கொண்டனர். தொடர் பஞ்சமிநில மீட்புப் போராட்டங்களின் விளைவாக கடந்த 2015 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் அனைத்து பஞ்சமி நிலங்களையும் மீட்டு உரிய பயனாளிகளுக்கு ஒப்படைக்கும் வகையில் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் உறுப்பினராகக் கொண்டு ஒரு மத்திய கமிட்டி அமைத்து ஆறு வார காலங்களுக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கைகளையும் தமிழ்நாட்டு அரசும், நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட பஞ்சமி நில மத்தியக் கமிட்டியும் எடுக்கவில்லை. இதை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. மேலும் பஞ்சமி நிலங்களை மீட்டு உரிய பயனாளிகளுக் வழங்க வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது.*

*20. தீண்டாமைச் சுவர்கள் சாதிய வன்கொடுமை களை அதிகப்படுத்தும் நிலையில் கடந்த காலங்களில் பல்வேறு இழப்புகளை ஒடுக்கப்பட்ட மக்கள் சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் தமிழக அரசே முழுப் பொறுப்பெடுத்து தமிழகமெங்கும் அமைக்கப்பட்டுள்ள தீண்டாமைச் சுவர்களைக் கணக்கெடுத்து அவற்றை யெல்லாம் தரைமட்டமாக்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

*21. தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆலயங்களில் தமிழில் மட்டுமே குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்ற நடைமுறையைத் தமிழக அரசு கொண்டு வர வேண்டும் எனவும், இந்து சமய அறநிலையத் துறை என்ற பெயரைத் தமிழர்களின் சமய அறநிலையத் துறை என மாற்றிப் பெயரிட வேண்டும் எனவும், தமிழக ஆலயங்களில் சமசுக்கிருத பூசனை(அர்ச்சனை)க் கட்டணத்தில் பாதிக் கட்டணம் மட்டுமே தமிழ்ப் பூசனை (அர்ச்சனைக்கு)ப் பெறப்பட வேண்டும் எனவும் தமிழக அரசை இம் மாநாடு வேண்டுகிறது.*

*22. தமிழக உயர்நெறி மன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டுமென்று மிக நீண்ட காலமாகப் போராடி வருகின்ற வழக்கறிஞர்களின் கோரிக்கைகளை தமிழக உயர்நெறிமன்றம் சிறிதும் பொருட்படுத்தாமல் தட்டிக் கழிப்பதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக் கிறது. மிக விரைவில் தமிழை வழக்காடு மொழியாக ஆக்க வில்லையென்றால் வெகுமக்களைத் திரட்டி அதற்கெனத் தனியே போராட வேண்டியிருக்குமென தொடர்புடைய துறையினருக்கு இம் மாநாடு வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறது.*

*22. தமிழகத்தில் செயல்படுகிற ஐஐடி உள்ளிட்ட இந்திய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் முழுமை யான அளவில் இடஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் என இம் மாநாடு கடுமையாக வலியுறுத்து கிறது.*

*23. கேரள மாநிலத்தைப் போல, பூசகர் (அர்ச்சகர்) களாகப் பயிற்சி பெற்ற ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்தவர் களையும் கோயில்களில் பூசகர் (அர்ச்சகர்)களாகத் தமிழக அரசுப் பணி நியமனம் செய்ய வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.*

*24. திண்டுக்கல்லில் கடந்த இருபதாண்டுகளாக நிறுவ மறுக்கப்பட்டுவரும் திருவள்ளுவர் சிலையை நிறுவு வதற்குத் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது. விரைந்து சிலை நிறுவ நட வடிக்கை எடுக்கப்படாமல் போகுமானால், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பே முன்னெடுத்துத் திருவள்ளுவர் சிலையை நிறுவும் என இம் மாநாட்டின்வழி அறிவிக்கிறது.*

*25. இந்திய அரசியல் சட்டத்தை யாத்தளித்த சிற்பி என்கிற பெருமைக்கும், சாதி ஒழிப்புப் போராட்டக் குறியீடாகவும் அறியப்படுகிற அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக் கோவை, ஈரோடு உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களில் நிறுவ காவல்துறை தொடந்து மறுத்துவரும் நிலையில் தமிழக அரசே பொறுப்பெடுத்துத் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நிறுவ வேண்டும் என இம் மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது.*

*26. அண்மைக் காலமாய்ச் சாதிவெறியோடும், மதவெறியோடும் திருவள்ளுவர், பெரியார், அம்பேத்கர் எனக் குமுகத் தலைவர்களின் சிலைகளை உடைத்திடும் கயவாளிகளின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும், அப்படியான குமுகப் பகைவர் களை அரசு கடுமையாக ஒடுக்கவேண்டும் என மாநாடு வலியுறுத்துகிறது.*

*27. கோவை மாவட்ட சிறுவாணி நீர்வளம் புகழ் பெற்ற நிலையிலிருக்க அதை இதுவரை கையாண்டு வந்த கோவை மாநகராட்சி கோவை மாநகருக்கும், கோவை மாவட்ட அளவில் பல ஊர்களுக்கும் தண்ணீரை நிறைவோடு வழங்கிவரும் நிலையில் பிரான்சு நாட்டைச் சார்ந்த சூயஸ் எனும் பன்னாட்டு நிறுவனத்திற்கு அப்படியே அக் குடிநீர் உரிமையை விற்றுவிட்ட கொடுமையை தமிழக அரசு செய்திருக்கிறது. இதன் மூலம் இலவயமாகவும், மிகவும் மலிவான விலையிலும் தண்ணீரைப் பெற்றுவந்த கோவை மாநகர, மாவட்ட வெகுமக்கள் அனைவரும் பெரும் நெருக்கடிகளுக் குள்ளாகி அதிகப்படியான நீரைப் பெறக்கூடிய அவலமான சூழல் உருவாக இருக்கும் நிலையில், அந்தப் பன்னாட்டு நிறுவனத்தின் உறவிற்கும், அதை ஏற்படுத்திய தமிழக அரசின் நடைமுறைக்கும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறது. தமிழக அரசு உடனடியாக இவ் வொப்பந்தத்தை கைவிட்டுவிட்டு கோவை மாவட்டவாழ் மக்களுக்கு மாநகராட்சியின் பொறுப்பிலேயே தண்ணீரை வழங்க வலியுறுத்துகிறது.*

*28. தமிழக மக்களின் எவ்வகை உரிமைகளுக்கும் குரல்கொடுக்காத திரைப்பட நடிகர் இரஜினிகாந்து, அண்மைக் காலமாகத் தமிழகத்தின் உரிமைகளுக்குப் போராடுகிற மக்களின் போராட்டங்களையும்,*

(4ஆம் பக்கம்)

## விடுதலை இராசேந்திரன் விளக்க உரை (5)

# பார்ப்பன இந்தியாவை எதிர்த்து நடப்பதே இப்போது மக்கள் நடத்தும் போராட்டங்கள்

***குடியுரிமைத் திருத்தச் சட்டம் – குடியுரிமை பதிவேடு – தேசிய மக்கள் தொகைப் பதிவேடு களில் பா.ஜ.க. ஆட்சி அவசரம் காட்டுவது ஏன்? என்பதை விளக்கி ஜனவரி 4, 2020 அன்று, சென்னை தலைமைக் கழகத்தில் நடந்த ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை யாற்றினார். அவரது உரையிலிருந்து:*** (சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்திரா காந்தி பிரதமராகிறார். பிரதமர் ஆனவுடன் ‘ஆர்கனைசர்’ பத்திரிக்கை என்ன எழுதுகிறதென்றால், ‘பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்ததே தேவையில்லாத ஏமாற்றுத்தனமான முயற்சி. ஓட்டுரிமை அளிக்கக் கூடாது. It is becoming clear that the Female franchise is unnecessary duplicate of effort. பெண்களுக்கு ஓட்டுரிமை அளிப்பது போலித்தனமான முயற்சி’ என்று எழுதினார்கள். ஏனென்றால் அப்போது இந்திரா காந்தி பிரதமரானார். கணவர் இறந்த பின்பு கணவர் இல்லாத பெண்மணியாக அவர் இருக்கிறார். 1966 ஜனவரி 30 அன்று ஆர்கனைசர் ஒரு தலையங்கத்தைத் தீட்டியது. அதில் ஆர்.எஸ்.எஸ். தனது கருத்தைப் பதிவு செய்தது. ‘நான் ஒரு இந்து. எனவே அமங்கலமான தீய சகுனத்தை ஏற்றுக்கொண்டு அழிவை தேடிக் கொள்ள முடியாது. நான் ஏராளமான சரித்திரத்தைப் படித்திருக்கிறேன், எங்கெல்லாம் பெண்கள் ஆட்சி ஏற்படுகிறதோ அங்கெல்லாம் அறிவு மலிவும், ஒழுக்கக் கேடுகளும், சீரழிவுகளுமே அரங்கேறியிருக் கின்றன’ இப்படித்தான் ‘ஆர்கனைசர்’ பத்திரிக்கை எழுதியது. இன்றைக்கு இஸ்லாமிய பெண்களுக்கு வேண்டுமானால் முத்தலாக்கிற்கு குரல் கொடுப்பார்களே தவிர, இந்து பெண்கள் சபரி மலை கோவிலுக்குள் நுழைவதற்கு உரிமை அளிக்க மாட்டார்கள். பெண்கள் என்றாலே ‘சம உரிமைக்கு தகுதியற்றவர்கள்’ என்பது தான் அவர்களுடைய கோட்பாடு.

இரண்டாவது வர்ணாஸ்ரம தர்மம் அதை ஆதரிப்பதாக கோல்வாக்கர் வெளிப்படையாக கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல வர்ணாஸ்ரம தர்மம் ஏற்படுத்தியிருக்கிற ஜாதியமைப்பு நமக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பது தான் அவருடைய கருத்தாக உள்ளது. Bunch of thoughts நூலில் அவருடைய மொழியிலேயே நான் படித்துக் காட்டுகிறேன், ‘History proves that Mohammedans could win over the northeast easily. வடகிழக்கு மாநிலங்களில் இஸ்லாமியர்கள் எளிமையாக வெற்றி பெற்று விட்டார்கள். ஏன் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்று சொன்னால்? Buddhism has shatterd the pattern of the caste system. அந்த பகுதிகளில் புத்தமதம் தோன்றி ஜாதியமைப்பை நிலைகுலைய செய்துவிட்டது. ஜாதியமைப்பு நிலைகுலைந்து போனதனால் இஸ்லாமியர்கள் அந்த தேசத்தை எளிமையாக பிடித்து விட்டார்கள். But contrary to this அதற்கு மாறாக The Hindu religion was strong in Delhi and Uttarpradesh. உத்திரபிரதேசம், டெல்லியில் இந்து மதம் வலிமையாக இருந்தது. Despite the Muslim rule. முஸ்லிம் ஆட்சி நடந்த பின்பும் கூட இந்து மதம் வலிமையாக இருந்தது. Because the caste system strictly followed there. ஜாதியமைப்பைக் கடுமையாகப் பின்பற்ற முடிந்ததன் காரணமாகத்தான் நாம் இந்துமதத்தைப் காப்பாற்ற முடிந்தது என்று கோல்வாக்கர் எழுதியிருக்கிறார்.

இவர்கள் மாநில உரிமைகளுக்கும் எதிரான வர்கள். இந்தியா எனும் கோட்பாட்டை எதிர்க் கிறவர்கள். வர்ணாஸ்ரமத்தை ஆதரிக்கிறவர்கள். சமஸ்கிருதம்தான் இந்த நாட்டின் மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள். இவ்வளவும் இந்திய மக்களுக்கு எதிரான கொள்கைகளை வைத்துக் கொண்டு இந்த நாட்டை காப்பாற்ற வந்த புனிதர்களைப் போல பேசிக் கொண்டுள்ளனர்.

வரலாற்றைப் பார்த்தோமானால், 1829 சதி உடன்கட்டை ஏறுதல். கனவன் இறந்தவுடன் மனைவியை நெருப்பில் போட்டு சாகடிப்பது. வில்லியம் பெண்டிங் காலத்தில் தடை செய்யப் பட்டது. வைதீக மதமும், வேத மதமும் இந்தத் தடையைக் கடுமையாக எதிர்த்தது. அப்போது அவர்கள் என்ன விளக்கம் கொடுத்தார்களென்றால் கணவன் இறந்து மனைவி தானாக முன்வந்து கணவனுடன் உடன்கட்டை ஏறி மோட்சத்திற்கு போவதை நாம் எப்படித் தடுப்பது? இப்படித்தான் கூறினார்கள். அதாவது பெண்ணாக இருக்கிறவர்கள் படிப்பதற்கு உரிமையில்லை, சுதந்திரமாய் வாழ உரிமையில்லை, விரும்புகிற ஆணைத் திருமணம் செய்து கொள்ள உரிமையில்லை, ஆனால் கணவன் இறந்த பின்பு உடன்கட்டை ஏற மட்டும் தாராள உரிமை உள்ளது என்பதை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமா?



**“தீண்டப்படாத மக்களை இந்துக்கள் பட்டியலில் சேர்க்க மறுத்தது இந்து மகாசபை.”**

அடுத்து விதவை மறுமணம். திருமணமாகி கணவன் இறந்த பின்பு மறுமணம் செய்து கொள்ளலாம் என்று 1856இல் இந்து திருமண சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போதிருந்த பார்ப்பனர்கள் என்ன கூறினார்களென்றால், ‘கிருத்தவர்கள் இதில் தலையிட்டு இந்து தர்மத்தை குலைக்கிறார்கள்’ என்று அன்று பார்ப்பன சமூகம் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. அந்த சமூகத்தில் இருந்த ஜி.சுப்பிரமணி அய்யர் தனது மகளுக்கு விதவைத் திருமணம் செய்து வைத்தார் என்ற காரணத்திற்காக அவரை ‘பிராமண’ சமூகத்தி லிருந்தே விலக்கி வைத்தார்கள். சட்டம் இயற்றப் பட்டு 25 ஆண்டுகளுக்குப் பின்பு தான் 1881இல் முதல் விதவைத் திருமணம் நடந்தது.

அடுத்து பால்ய விவாகம். குழந்தைத் திருமணம் செய்து வைப்பது சாஸ்திரத்திற்கு எதிரானது. ஏன் மனைவியர்களை நெருப்பில் தள்ளி சாகடித்தார்கள்? ஏன் குழந்தைத் திருமணம்? இதற்கு பின்னும் ஒரு கருத்து இருக்கிறது. குழந்தைக்கே திருமணம் செய்தால் வர்ணக் கலப்பு இருக்காது. வேறொரு வர்ணத்தில் கலப்பு ஏற்படாது. ஒரு வேளை கணவன் இறந்த பின்பு அவர்களை நெருப்பில் தள்ளி (உடன்கட்டை) கொன்றுவிட்டால் வர்ணக் கலப்பு ஏற்படாது. குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து விட்டால் ஒரே வர்ணத்துக்குள் பெற்றோர்களே துணையைத் தேடி வைத்து விடலாம். இதற்காகத்தான் இவை இரண்டையும் பார்ப்பனர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது அதை ஒழிக்கவும் எதிர்த்தார்கள். ‘தேவதாசி’ முறை இருந்தது. 1920களில் காங்கிரசில் இருந்த சத்தியமூர்த்தி அய்யர் கூட, ‘நாங்கள் சட்டத்தை எதிர்த்து சிறைக்குப் போனாலும் போவோமே தவிர சாஸ்திரத்தை எதிர்த்து நரகத்திற்குப் போக மாட்டோம்’ என்று அவர் சொன்ன காலமும் இருந்தது.

இந்து இந்து என்று சொல்கிறார்களே அந்த இந்து என்ற சொல்லுக்கு இவர்கள் எத்தகைய வரையறையை வைத்திருக்கிறார்கள்? அவர்களிடம் அதற்கான வரையறை என்ன இருந்தது என்ற வரலாற்றை நாம் பின்னோக்கி பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. முதன் முதலில் ‘இந்து’ என்று வரையறுத்தது யார் என்பதில் குழப்பம். எது கடவுள் என்பதிலும் அவர்களுக்கு குழப்பம். திட்ட வட்டமான வரையறை எதுவும் அவர்களுக்கு கிடையாது. இந்து என்றால் யார்? என்பதை நிரூபிப்பதற்கு அவர்களிடம் ஆதாரம் இல்லை. சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது? யார் முஸ்லிம் இல்லையோ, யார் கிருத்துவர்கள் இல்லையோ, யார் பார்சி இல்லையோ அவர்கள் தான் இந்துக்கள் என்று எழுதியிருக்கிறது.

முதன் முதலில் பார்ப்பனர்களெல்லாம் சேர்ந்து 1828இல் உருவாக்கியது பிரம்ம சமாஜம் என்ற ராஜா ராம் மோகன்ராய் ஏற்படுத்திய அமைப்பு. அவர், சிலை வணக்கம் கூடாது. பல கடவுள் பழக்கம் கூடாது போன்ற கருத்தைத் தான் முன் வைக்கிறார். அடுத்து 1875இல் ஆரிய சமாஜம் தயானந்த சரஸ்வதியால் தோற்றுவிக்கப்படுகிறது. அவர் என்ன சொல்கிறார், சிலை வணக்கம் வேண்டாம், ஆனால் அனைவரும் ஒரே ஜாதிக்குள் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தைக் கொண்டு வருகிறார்.

அதன் பிறகு பஞ்சாப் இந்து சபை வருகிறது. இது இஸ்லாமியர்களை ஏற்றுக்கொள்கிறது. பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பஞ்சாப் இந்து சபை ஆகிய அமைப்புகளில் இஸ்லாமிய வெறுப்புகளே இல்லை. சிலை வழிபாடுகளும் இல்லை. அதன் பிறகு 1915 இல் இந்து மகா சபை தோற்றுவிக்கப்படுகிறது. இது இந்து ஒற்றுமையைப் பற்றி பேசுகிறது. இந்து ஒற்றுமையைப் பற்றி பேசுகிறபோதுகூட அதில் அவர்கள் இஸ்லாமிய வெறுப்பை சேர்த்துக் கொள்ளவில்லை. பிறகு எப்போது இஸ்லாமியம் எதிர்ப்பு வருகிறது என்று சொன்னால், 1921ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்கள் ஒரு சென்செஸ் கணக்கெடுக்கிறார்கள். அப்போது அவர்கள், கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள் என்று தனித் தனியாக கணக்கெடுக்கிறார்கள். கணக்கெடுப்பின் போது பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை இந்தியாவோடு இருக்கிறது. இஸ்லாமியர்களின் மக்கள் தொகை 24 விழுக்காடு ஆகிவிடுகிறது. அப்போது, பார்ப்பனர்கள் மற்றும் உயர்ஜாதிக் காரர்களுடைய மக்கள் தொகையை விட இஸ்லாமியர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, எனவே தீண்டப்படாத மக்களை இந்து மதத்திற்குள் சேர்த்துக் கொள்ள லாமா? என்ற விவாதம் அப்போது நடக்கிறது. இந்து மகாசபையின் ஒரு பிரிவு தீண்டத்தகாதவர்களை சேர்க்கக் கூடாது என்கிறார்கள். மற்றொரு பிரிவோ நமது மக்கள் தொகை எண்ணிக்கையில் அதிகமாக இருக்க வேண்டும் அதனால் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.

அதன்பிறகு 1924ஆம் ஆண்டு அலகாபாத்தில் இந்து மகா சபை ஒரு மாநாட்டை கூட்டுகிறது. அந்த மாநாட்டில், ‘தாழ்த்தப்பட்ட மக்கள் பள்ளி, கோவில், பொது நீர் குழாய்களை பயன்படுத்துவதை அனுமதிக்க வேண்டும் ஆனாலும் அவர்களுக்கு பூணூல் அணிவிப்பதும், வேதம் கற்றுக் கொடுப்பதும் இந்து மதத்திற்கு எதிரானது’ என்ற நிபந்தனையுடன் தான் பார்ப்பனர்கள் தீண்டத்தகாத மக்களை எண்ணிக்கைக்காக இந்து மதத்தில் பட்டியலில் சேர்க்கிறார்கள். அம்பேத்கர் கேட்டார், ‘நான்கு வர்ணத்தை வைத்து விட்டீர்கள் பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர்னு பிரித்து பஞ்சமர்களை அவர்ணஸ்தர்கள் அதாவது வர்ணமற்றவர்கள் என்று நீயே பிரித்து வைத்திவிட்டு ஏன் எங்களை இந்து மதத்தில் சேர்க்கிறாய்?’ என்று கேட்டார். எனவே இப்படியொரு நிபந்தனையுடன் தான் பஞ்சமர்களை இந்து மதத்தில் பட்டியலில் சேர்த்தார்கள்.

1924ஆம் ஆண்டு மாநாட்டில். முதலில் பாய் பிரம்மனந்தார் பிறகு சாவர்க்கர் ஆகியோர் தான் பாகிஸ்தான் என்பது இஸ்லாமியர்களுக்கான நாடு இந்தியா இந்துக்களுக்கான நாடு இங்கு இருக்கும் இஸ்லாமியர்கள் அங்கே சென்றுவிட வேண்டும் இங்கே அங்கே இருக்கும் இந்துக்கள் இங்கே வந்து விட வேண்டும் என்று முதலில் கூறியதே இந்த இருவரும்தான். அதன் பிறகு தான் ஜின்னா தனிநாடு கோரிக்கையே கேட்டார். இதே கண்ணோட்டத் தோடு தான் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கான் நாட்டு முஸ்லிம்களுக்கு மட்டும் இங்கு குடியுரிமை உண்டு என்கிறார்கள். முடிந்த வரை இங்குள்ள இஸ்லாமியர்களை ஏதேனும் காரணம் காட்டி ஆவணங்கள் இல்லை என்று கூறி நாடற்றவர்களாக்கி விடலாம் என்று திட்டம் போடுகிறார்கள். மதம் ஆட்சி செய்யும் நாடுகளில் நாத்திகர்கள் பாதிக்கப்படு கிறார்கள். அவர்களுக்கும் இங்கே வந்தால் குடி யுரிமை இல்லை என்று கூறுகிறது, இந்தச் சட்டம். எனவே அப்பட்டமான பொய்களையும், உளறல் களையும் அவர்கள் CAA வை பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இரண்டு இந்தியா இருக்கிறது. ஒன்று, பார்ப்பனர்கள் இந்தியா, இரண்டு பார்ப்பனரல்லாத மக்களுடைய இந்தியா என்று இரண்டாக இன்றைக்கு பிரிந்து கொண்டு நிற்கிறது.

இந்தியாவைப் பார்ப்பன இந்தியாவாக மாற்ற இந்து இராஷ்டிரத்தை அவர்கள் முன் வைக்கிறார்கள். அதற்காக இஸ்லாமியர்களை தனிமைப்படுத்திக் காட்டுகிறார்கள். ஆனால் இந்த வலைக்குள் சிக்காத பார்ப்பனரல்லாத இளைஞர்கள், மதசார்பற்ற கட்சிகள், எதிர்த்து போராடுகிறார்கள். பார்ப்பனர்கள் இந்து இராஷ்டிரத்தை அமைக்க அவர்களே அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். வர்ணாஸ்ரமப் படி நீ சூத்திரன், பஞ்சமன் என்று ஒதுக்கினார்கள். அதேபோல் தற்போது பார்ப்பன இந்தியாவாக மாற்ற இந்து இராஷ்டிரத்தை கையில் எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேலையில் பார்ப்பன இந்தியாவா? பார்ப்பன ரல்லாதோர் இந்தியாவா? என்ற போராட்டம் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. உண்மையான வரலாற்றை பார்ப்போமானால் இந்த நாட்டில் யார் அந்நியர்கள்? கைபர் போலன் கணவாய் வழியே இந்த நாட்டில் குடியேறி இந்த நாட்டின் சிந்து சமவெளி மக்களின் திராவிட கலாச்சாரத்தை அழித்து ஆரிய கலாச்சாரத்தின் கீழ் வர்ணாஸ்ரம தர்மத்தை கொண்டு வந்து அவர்களை ஜாதிகளாக பிரித்து இந்துக்கள் என்று அறிவித்து நான் தான் உனக்கு தலைமை தாங்குவேன் என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் நீ அடிமையாக வாழ வேண்டும் என று அதிகாரத்தை தன் கையில். எடுத்து சிறுபான்மை கூட்டமாக இருக்கிற பார்ப்பனர்கள் தான் வரலாற்று ரீதியாக வெளியேற்றப்பட வேண்டிய அந்நியர்கள்!

அதைத் தான் பெரியார் இயக்கம் ஒரு காலத்தில் பேசியது பாப்பானே வெளியேறு என்ற முழக்கத்தை ஒரு காலத்தில் முன்வைத்தது. ஆனால் இப்போது ஒரு

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மேடையிலேயே திருமணம் நடத்தி பண்பாட்டுப் புரட்சியை நிகழ்த்திய திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள்




கோவை நீலச்சட்டைப் பேரணியையொட்டி நடந்த ஜாதி ஒழிப்பு மாநாட்டில் இரண்டு திருமணங்களை திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி நடத்தி வைத்தார். இரண்டு இணையர்களுமே திராவிடர் விடுதலைக் கழகத்தின் முன்னணி செயற்பாட்டாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன்-பா. குமாரி ஆகியோரின் மகள் இலக்கியா வுக்கும், மேட்டூர் காவலாண்டியூர் கழகத் தோழரும் தலைமைக் குழு உறுப்பினரு மான கா. ஈசுவரன்-ஈசுவரி ஆகியோரின் மகன் கணிகா செல்வனுக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் மேடையில் நடந்தது. திருச்செங்கோடு ரங்கநாதன்-புஷ்பலதா ஆகியோரின் மகனும், கழகத் தோழரும் ஊடகவியலாளருமான ர. பிரகாஷ்-காவலாண்டியூர் கழகத் தோழர் சரசுவதி-சந்திரன் ஆகியோரின் மகள் இரம்யா வுக்கும் மேடையில் திருமணம் நடந்தது. மாலை மாற்றிக்கொண்டு 5 நிமிடங்களில் இரண்டு திருமணங்களும் நடந்து முடிந்தன. மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு பிரகாஷ்-ரம்யா இணையர் ரூ.5000-மும், இணையர் இலக்கியா-கணிகா செல்வன் சார்பில் ரூ.5000-மும் கழக ஏட்டுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

## சேலம் மாநாட்டில் நடந்தது என்ன? : சிறப்புக் கூட்டத்தில் விரிவாக விளக்கினார், மூத்த வழக்கறிஞர் துரைசாமி

‘1971இல் சேலம் மாநாட்டில் நடந்தது என்ன?’ என்ற தலைப்பில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் துணைத் தலைவரும் மூத்த வழக்கறிஞருமான செ. துரைசாமி, சென்னையில் தலைமைக் கழக அரங்கில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் ஒன்றரை மணி நேரம் விரிவாகப் பேசினார். நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.




சேலம் மாநாட்டையொட்டி இந்துக் கடவுள்களை புண்படுத்தி விட்டதாக மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் தந்தை பெரியார் ஆணையை யேற்று தோழர்கள் சார்பில் வாதாடியவர் வழக்கறிஞர் துரைசாமி. வழக்கு முதலில் சேலம் நீதிமன்றத்தி லும் பிறகு சென்னை பெருநகர நீதி மன்றத்திலும் நடந்தது. பிறகு சென்னை உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றத்திலும் நடந்தது.

சேலம் - சென்னை பெருநகர நீதிமன்றங்களின் வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக ‘துக்ளக்’ சோ சாட்சிய மளித்தபோது அவரை குறுக்கு விசாரணை செய்தார், வழக்கறிஞர் துரைசாமி. பெரியாரை நோக்கி சேலம் ஊர்வலத்தில் செருப்பு வீசியதற்கு வருத்தமும் மன்னிப் பும் நீதிமன்றத்தில் சோ. ராமசாமி தெரிவித்ததை வழக்கறிஞர் பதிவு செய்தார்.

‘இராமன்’ படம் மீது திராவிடர் கழகத் தோழர்கள் செருப்பாலடிக்க நேர்ந்தது ஏன் என்பதற்கான காரணங்களை விளக்கினார், வழக்கறிஞர் துரைசாமி. வால்மீகி இராமாயணத்திலிருந்து அடுக்கடுக்கான ஆதாரங்களை சாட்சிக் கூண்டில் நின்ற சோ. ராமசாமியிடம் எடுத்துக் காட்டி அவரையே படிக்க வைத்தார். இராமன் பிறப்பு, அசுவமேத யாகம், புத்ரகாமேஷ்டி யாகம் பற்றி உள்ளிட்ட பல்வேறு செய்திகளை வால்மீகி இராமாயணத்திலிருந்து ‘துக்ளக்’ சோவே படித்ததையும், படித்தப் பிறகு தடுமாறி நிலைகுலைந்து நின்றதையும் வழக்கறிஞர் விரிவாக எடுத்துரைத்தார். இந்து மத உணர்வுகள் புண்படுத்தப்பட்டது என்பதை நிரூபிக்க வில்லை என்ற அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

வழக்கறிஞர் துரைசாமி உரை குலுக்கை, கலகக்காரன், ஏன் மீடியா, ‘யுடியூப்’ காணொளியில் பதிவேற்றப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடு உருவாகி விட்டது எல்லைகள் உருவாகிவிட்டன. கோல்வாக்கர் போன்று எல்லைகளைப் பற்றிக் கவலைப்படாதே என்று முட்டாள்தனமாகப் பேச நாம் தயாராக இல்லை. எல்லைகள் உருவாகிவிட்டது. நீ பார்ப்பானாக இந்த நாட்டிற்குள் வந்தாய், எங்களை அடிமையாக்கினாய், இதற்கு பிறகும் கூட இந்து என்று கூறுகிறாய். இந்துக்களுக்குள் ஜாதிகளை ஏன் வேண்டாம் என்று கூறுவதில்லை? இந்து என்று கூறுகிறாய், இந்து பெண்களுக்கு ஏன் சம உரிமை அளிக்க மறுக்கிறாய்? இந்து என்று கூறுகிறாய் ஏன் ஒரு மாநிலத்தினுடைய மொழி, இன அடையாளங்களை ஏற்க மறுக்கிறாய்? இப்படி கேள்விகளை கேட்டாலும் இந்து இந்து என்று தான் சொல்கிறார்களே தவிர எந்த பதிலும் இல்லை. இந்து என்று கூறி பார்ப்பனர்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் இந்து இராஷ்டிரமாக மாற்ற வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், பார்ப்பனரல்லாத இந்தியாவைச் சேர்ந்த மக்கள் பெரியார் காட்டிய பாதையில் பார்ப்பானே நீ தான் அந்நியன், நீ தான் இந்த நாட்டில் சமூகத்தை கூறு போட்டவன், நீ தான் இன்றுவரை எங்களது கலாச்சாரத்துடன் ஒட்டி வாழாமல் இருப்பவன் என்று நாங்கள் பேச வேண்டிய நிலையை நீயே உருவாக்குகிறாய்.

இஸ்லாமியர்கள் மட்டுமல்ல அனைத்து மதத்தினரும் எங்களது நண்பர்கள் தலித் மக்களை இந்துக்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு கூட நீ எதிர்ப்பு தெரிவித்தவன், இன்றைக்கும் ஊர் வேறு சேரி வேறென்று பிரித்து வைத்திருக் கிறவன், உணவு முறையில் மாட்டுக்கறி சாப்பிடக்கூடிய மக்களை அடித்தே சாகடிக்கிறாய். நான் சொன்னால்தான் கடவுள் கேட்கும் என்று மந்திரத்தை உருவாக்கி அதை மற்றவன் ஏற்றுக் கொண்டு கைகட்டி நிற்க வேண்டும் என்று சொல்கிறாய், கோவிலுக்குள் வந்தால் சூத்திரன், தீண்டத்தகாதவன் வந்துவிட்டான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாய். இதுவரை இவையெல்லாம் ஏற்றுக்கொள்ள மாட்டேனென்று எந்த இந்துவாவது, பா.ஜ.க.காரனாவது, சங்பரிவாரங்களை சேர்ந்தவர்களாவது எந்த பார்ப்பனராவது கூறியிருக்கிறார்களா?

‘இந்து ராஜ்யம்’ உருவாக்க, இஸ்லாமியர்களை அன்னியர்களாக்கிக் காட்ட வேண்டும் என்ற உள் நோக்கத்துடனேயே இப்போது, குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசிய மக்கள் பதிவேடு, தேசிய குடிமக்கள் பதிவேடுகள் வேகம் வேகமாக அமுல்படுத்தப்படுகின்றன என்றார் விடுதலை இராசேந்திரன். **(நிறைவு)**

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராடுபவர்களையும் இழிவுபடுத்தித் திமிரோடு பேசிவருவதை இக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. மக்கள் போராடி வென்றெடுத்த பல உரிமைகளை ஏற்று மகிழ்கிற அவரின் திமிர்பிடித்த பேச்சுகள் இனி தொடரக்கூடாது என்றும், அவர் நாவடக்கிப் பேச வேண்டும் என்றும் எச்சரிக்கிறோம்..

29. குடிமக்கள் திருத்தச் சட்டம், தேசியக்குடிமக்கள் பதிவேடு மற்றும் தேசிய மக்கள் தொகைப் பதிவேடு போன்றவற்றை எதிர்த்து இந்தியா முழுவதும் தீவிரமான மக்கள் திரள் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தனது மக்கள் பகை நடவடிக்கைகளைச் செயல்படுத்தியே தீருவோம் எனும் பாசிச பாரதீய ஜனதாக் கட்சிக்குப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் சாதி / மத வேறுபாடுகளை ஊக்குவிக்கும் பார்ப்பனிய பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிராகத் தமிழக மக்கள் சமரசமற்ற போராட்டங்களை எழுச்சியுடன் முன்னெடுக்க வேண்டும் எனவும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு இம் மாநாட்டின்மூலம் அறைகூவல் விடுக்கிறது.

30. பெரியார் மண் எனப்படும் தமிழகத்தில் பகுத்தறிவு மற்றும் அறிவியலுக்கு எதிரான பரப்புரை, பார்ப்பன இந்துத்துவ அமைப்புகளால், ஊடகங்களால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அறிவியல் மனப்பான்மையை (Scientific Temper ) ஒவ்வொருவரிடமும் பெருமளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என அரசியல் அமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. எனவே பெருகி வரும் சாதி / மதப்பாகுபாடு மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகத் தமிழகம் எங்கும் தமிழ்ச் சான்றோர் திருவள்ளுவர், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் மற்றும் பேராசான் கார்ல் மார்க்சு போன்றோர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பெயர்களில் படிப்பகங்கள், நூலகங்கள் போன்றவற்றைப் பெரியாரிய உணர்வாளர்கள் ஒவ்வோர் ஊரிலும் தொடங்கவேண்டும்.

**போராட்ட அறிவிப்புத் தீர்மானம்:** 31. சாதி ஆணவ வெறிகளுக்கு அடித்தளமாகவும், பார்ப்பனியக் கருத்தாக்கங்களின் தொகு மொத்த வெளிப்பாடாகவுமே மனுதர்மம் எனும் பார்ப்பனிய, சாதிவெறி பிடித்த நூல் உள்ளது என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும், தந்தைபெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரை அடையாளப்படுத்தியும், அதை மறுத்த செயல்பாடுகளை முன்னெடுத்தும் இருக்கின்றனர். அம்பேத்கரும், பெரியாரும் அக் கருத்துக்கும், செயற்பாடுகளுக்கும் முன்னோட்டமாக மனுதர்மத்தைத் தீயிட்டுக் கொளுத்தியும் இருக்கின்றனர்.. அவர்களின் வழிகாட்டலில் வெறிபிடித்த பார்ப்பனிய சாதிய ஆணவ நூலான மனுநூலை எதிர்வரும் மே 20ஆம் நாள் அதாவது அயோத்திதாசப் பண்டிதர் பிறந்தநாளில் தமிழகமெங்கும் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை முன்னெடுப்பது எனப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு, சாதி ஒழிப்பு மாநாட்டின்வழி அறிவிக்கிறது.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted: 14th February 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN